**திண்டிவனம் நகராட்சி**

**சாதாரண கூட்டம்**

## முன்னிலை:– திருமதி.ஆர்.நிர்மலா., நகர மன்ற தலைவர்.

**30.12.2022 வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.05 மணிக்கு திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகர மன்ற கூட்டரங்கில் நடைபெற்ற நகர மன்ற சாதாரண கூட்டப் பொருள் விபரம்.**

| பொருள். எண் | <u>பொருள் விபரம்</u> |
|---|---|
| **01).** | திண்டிவனம் நகராட்சி ஆணையாளர் அவர்களது **நவம்பர் 2022** மாதத்திற்கான தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது,<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>மன்றம் பதிவு செய்யலாம்.<br>(ந.க.எண். 3999/2022/சி1)<br>**தீர்மானம் எண்**: 234.<br>**பதிவு செய்யப்பட்டது,** |
| **02).** | அரசாணை (நிலை) எண்.20, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (எம்.ஏ.VI) துறை, நாள்.25.01.2022-ல், திண்டிவனம் நகராட்சியில் ரூ.25.50 கோடி மதிப்பீட்டில் புதிய பேருந்து நிலையம் அமைக்க நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.001/2002/DO1, நாள்.12.07.2022-ல் மேற்படி புதிய பேருந்து நிலையம் அமைப்பதற்கு ரூ.20.00 கோடி மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி வழங்கி உத்திரவிடப்பட்டுள்ளது.<br>இந்நகராட்சியின் 13.07.2022 நாளிட்ட அறிவிப்பின் மூலம் மேற்காணும் பணிக்கு 24.08.2022 அன்று வரை ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. அதன்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு 29.08.2022 அன்று தொழில்நுட்ப குழுவால் பரிசிலனை செய்து, வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி பெற்றுள்ளது.<br>அதனை தொடர்ந்து விலை விகித பட்டியல் (Price Bid) 01.09.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு தயார் செய்யப்பட்டுள்ளது. |

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர்களின் பெயர்கள் | 2021-2022 செந்தார விலைப் பட்டியல்படி (Schedule of Rate) படி ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம்(%) |
|---|---|---|
| 1 | M/S.PSKஇன்ஜினியரிங் கன்ஸ்ரக்ஷன் & கோ, நடுகோம்பை அஞ்சல், காளப்பநாயக்கன்பட்டி (வழி) நாமக்கல் மாவட்டம்-637404. | 14.99% மதிப்பீட்டு விலையை விட அதிகம் |
| 2 | திருமதி.பி.லட்சுமி.பி.எஸ்.சி, பாண்டியாறு, நடுகோம்பை அஞ்சல், காளப்பநாயக்கன்பட்டி (வழி) நாமக்கல் மாவட்டம். | 17.10% மதிப்பீட்டு விலையை விட அதிகம் |

மேலே வரிசை எண்.1-ல் உள்ள M/S.PSK இன்ஜினியரிங் கன்ஸ்ரக்ஷன் & கோ, என்ற ஒப்பந்ததாரர் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 14.99% கூடுதலாக விலைப்புள்ளி அளித்துள்ளதால், விலை குறைப்பு செய்யுமாறு 01.09.2022 நாளிட்ட முதல் அறிவிப்பு கடிதத்தில் கோரப்பட்டது.06.09.2022 நாளிட்ட M/S.PSK இன்ஜினியரிங் கன்ஸ்ரக்ஷன் & கோ, ஒப்பந்ததாரரின் கடிதத்தில் 11.95% விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்.

மேலும் விலைக்குறைப்பு செய்யுமாறு 08.09.2022 நாளிட்ட இரண்டாவது அறிவிப்பு கடிதத்தில் கோரப்பட்டு, ஒப்பந்ததாரர் 12.09.2022 நாளிட்ட கடிதத்தில் 9.95% விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்.

அதனை தொடர்ந்து 12.09.2022, 20.09.2022 மற்றும் 21.10.2022 கடிதங்களில் மேலும் விலைக்குறைப்பு செய்யுமாறு ஒப்பந்ததாரரை கோரப்பட்டது. M/S.PSK இன்ஜினியரிங் கன்ஸ்ரக்ஷன் & கோ, நாமக்கல் என்ற ஒப்பந்ததாரர் அளித்துள்ள 04.11.2022 நாளிட்ட கடிதத்தில் எரிபொருள் விலை உயர்வு, போக்குவரத்து வாடகை உயர்வு, மூலப்பொருட்கள் விலை உயர்வு மற்றும் ஆட்கள் கூலி உயர்வு காரணமாக மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்து LOA வழங்குமாறு கோரியுள்ளார்.

எனவே, திண்டிவனம் நகராட்சியில் புதிய பேருந்து நிலையம் அமைக்க M/S.PSK இன்ஜினியரிங் கன்ஸ்ரக்ஷன் & கோ, நாமக்கல் என்ற நிறுவனம் அளித்துள்ள இரண்டாவது விலை குறைப்பு கடிதத்தில் 2021-2022ம் ஆண்டில் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட 9.95% அதிகமாக அளித்துள்ளதாலும், அதனை

| | |
|---|---|
| | தொடர்ந்து மூன்றாவது முறையாக அளித்துள்ள கடிதத்தில், மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என கடிதம் அளித்துள்ள நிலையில், மேற்படி ஒப்பந்தப்புள்ளியினை இறுதி செய்வதற்கு உரிய அனுமதி வழங்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநரக தலைமை பொறியாளர் அவர்களை 04.11.2022 நாளிட்ட கடிதம் மூலம் கோரப்பட்டது.<br>தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களின் 02.12.2022 நாளிட்ட கடிதத்தில், ஒப்பந்தத்தாரரின் இரண்டாவது முறையாக 9.95% மதிப்பீட்டை விட கூடுதல் என்ற விகிதத்திற்கு விலைக்குறைப்பு செய்து வழங்கப்பட்டுள்ளதை, ஒப்பந்த நிறுவனத்திற்கு மீண்டும் விலைக்குறைப்பு கோரி கடிதம் அனுப்புமாறும், விலைக்குறைப்பு பெறப்பட்ட பின்னர் உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>மேற்படி தலைமைப் பொறியாளர் அவர்களின் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 06.12.2022 அன்று மீண்டும் விலைக்குறைப்பு செய்யுமாறு ஒப்பந்த நிறுவனத்திற்கு கடிதம் அனுப்பட்டது. ஒப்பந்த நிறுவனம் 14.12.2022 நாளிட்ட கடிதத்தில் 9.90% என்ற விகிதத்திற்கு விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்.<br>மேற்படி 9.90% 2021-2022ம் ஆண்டின் செந்தார விலை விகித பட்டியல்படியும், மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ள விலைவிகிதம், தற்போதைய 2022-2023ம் ஆண்டின் செந்தார விலைவிகித பட்டியல்படி (SOR) 1.99% என்ற விலைவிகிதத்தில் கூடுதலாக உள்ளது. மேற்படி புதிய பேருந்து நிலையம் அமைத்திட 24.08.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டு, இதுநாள்வரை வேலை உத்தரவு வழங்கப்படாமலும், இதனால் பணியினை ஆரம்பிக்கப்படாமல் காலதாமதம் ஏற்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநரகத்தில் இருந்து நடத்தப்படும் காணொலி காட்சி ஆய்வு கூட்டத்திலும் மற்றும் 01.12.2022 அன்று விழுப்புரம் மாவட்ட ஆட்சியரகத்தில் மாண்புமிகு நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில், மேற்படி பேருந்து நிலையம் அமைப்பதற்கு உடனடியாக LOA மற்றும் வேலை உத்தரவு வழங்கி பணியினை ஆரம்பிக்குமாறு மாண்புமிகு நகர்புற வளர்ச்சி துறை அமைச்சர் அவர்களும் மற்றும் அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கள் துறை அவர்களும் அறிவுறுத்தியுள்ளார்கள்.<br>எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதி M/S.PSK இன்ஜினியரிங் கன்ஸ்ரக்ஷன் & கோ, நாமக்கல் என்ற நிறுவனம் அளித்துள்ள 9.90% என்ற |

| | |
|---|---|
| | விலைவிகிதம் 2021-2022 ஆண்டின் மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பினும், தற்போதைய 2022-2023 ஆண்டின் செந்தார விலைப்பட்டியல்படி (SOR) 1.99% என்ற விலைவிகிதத்தில் மதிப்பீட்டை விட கூடுதலாக உள்ளதால் 9.90% என்ற விலைவிகிதத்தினை ஏற்று அதன்படி ஒப்பந்த நிறுவனத்திற்கு LOA மற்றும் வேலை உத்தரவு வழங்கலாம்.<br><br>மேலும் இதனால் ஏற்படும் கூடுதல் செலவினத்தினை நகராட்சி பொது நிதி அல்லது அனுமதியற்ற மனைப்பிரிவு மூலம் பெறப்பட்ட தொகையினை கொண்டு ஈடுசெய்யவும் மற்றும் மதிப்பீட்டு விலையை விட 9.90% கூடுதல் மதிப்பீட்டின் அடிப்படையில் வேலை உத்தரவு வழங்கிய பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் பின்னேற்பு (Ratification) பெறுவதற்கு கருத்துரு அனுப்புவதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலககுறிப்பு :-**<br>1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலையை விட கூடுதலாக 9.90% அளித்துள்ள M/S.PSK இன்ஜினியரிங் கன்ஸ்ரக்ஷன் & கோ, நாமக்கல் என்ற நிறுவனத்தாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கு மதிப்பீட்டு விலையைவிட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி பொது நிதி அல்லது அனுமதியற்ற மனைப்பிரிவு மூலம் பெறப்பட்ட தொகையினை கொண்டு ஈடுசெய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி மதிப்பீட்டு விலையை விட கூடுதலாக வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்தரவு வழங்கியதற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களிடம் பின்னேற்பு (Ratification) பெற கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>4. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று LOA மற்றும் வேலை உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 4206/ இ1/2021<br><br>**தீர்மானம் எண்:235.**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**03).**

இந்நகராட்சியில் **வருவாய் நிதி – 2022-2023ன்** கீழ் நகர மன்ற தீர்மான எண் : 167 நாள் : 28.09.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 14.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற 3 ஒப்பந்தப்புள்ளிகளில் M/S A1 Security Services and A1 Facility , Chennai நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி தகுதி பெறாததால் மீதமுள்ள 2 ஒப்பந்தப்புள்ளியின் விலை விகித பட்டியலை 27.10.2022 அன்று திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | டெங்கு கொசு ஒழிப்பு பணி மேற்கொள்ள ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை சப்ளை செய்யும் பணி | 25.00 | M/s கிரீன் அக்ரோ என்விரான்மென்ட் சர்வீசஸ் , மதுராந்தகம் | -0.75% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | M/s வாலாஜபேட்டை அக்ரோ இன்ஜினியரிங் சர்வீசஸ், வாலாஜபேட்டை | 3.75% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு :-**

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள M/s கிரீன் அக்ரோ, என்விரான்மென்ட் சர்வீசஸ், மதுராந்தகம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 4144/எச்1/2022)

**தீர்மானம் எண்:236 .**

**அனுமதிக்கப்பட்டது.**

**04).**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.26178/2017/பி3 நாள்.11.12.2017ன் படி இந்நகராட்சியில் தனியார் ஒப்பந்ததாரர் மூலம் 124 பணியாளர்களை பணிக்கு அமர்த்தி திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி திண்டிவனம் நகரில் உள்ள 18 வார்டுகளில் தனியார் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகள் செய்ய 06.12.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் M/S

| | |
|---|---|
| | சரம் என்விரோ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி நகர மன்ற தீர்மான எண்.46 நாள்.22.02.2019ல் ஏற்றுக்கொள்ளப்பட்டு ந.க.எண்.977/2017/எச்1, நாள்.28.02.2019 படி பணி உத்தரவு வழங்கப்பட்டு 01.03.2019 முதல் திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் தொடங்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களால் ந.க.எண்.30813/J3.2018 நாள்.11.12.2018ல் கூடுதலாக 42 பணியாளர்களை அமர்த்தி திடக்கழிவு மேலாண்மைப்பணிகள் செய்ய அனுமதி வழங்கியதன் பேரில் ஏற்கனவே நகராட்சி திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை செய்து வரும் M/S சரம் என்விரோ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை என்ற நிறுவனத்திற்கு 124 பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டு இருந்த நாள் ஒன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.453/- என்ற விகிதத்திலேயே கூடுதலாக 7 தூய்மைப் பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் வழங்குவதற்கு மேற்படி நிறுவனத்திற்கு பணி உத்தரவு ந.க.எண்.977/2017/எச்1, நாள்.01.08.2020 படி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட நிறுவனத்திற்கு மொத்தம் 173 தூய்மை பணியாளர்களை வெளிக்கொணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் 01.08.2020 தேதியிலிருந்து ந.க.எண்.977/2017/எச்1, நாள்.01.08.2020 வழங்குவதற்கு பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.<br>மேற்படி நிறுவனம் 01.03.2019 முதல் நகராட்சி அலுவலக உத்தரவில் குறிப்பிட்ட வகையில் பணியாளர்களை பணிக்கு அமர்த்தி நல்ல முறையில் குப்பைகளை சேகரித்தல் தரம் பிரித்தல் சாலைகள் பெருக்குதல், கால்வாய் சுத்தம் செய்தல், இயற்கை உரம் தயாரித்தல், உள்ளிட்ட அனைத்து திடக்கழிவு மேலாண்மைப் பணிகளையும் செவ்வனே செய்து வருகின்றனர். மேலும் பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய சேமநல நிதி, காப்பீடு முதலியவற்றையும் முறையாக செலுத்தி ரசீது வழங்கி உள்ளனர். இவர்களுக்கு ஒப்பந்த காலம் 28.02.2022 ல் முடிவடைந்துவிட்டதால் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.21787/2021/EA2 நாள்.02.10.2021 சுற்றிக்கையின் படி புதியதாக ஒப்புந்தப்புள்ளி கோர இவ்வலுவலக ந.க.எண்.4302/2021/எச்1 நாள்.19.11.2021 கடிதம் மூலம் முன்மொழிவுகளை நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. தற்போது வரை நிர்வாக அனுமதி பெறப்படவில்லை. புதியதாக ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>எனவே இந்நகராட்சியிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் தொய்வின்றி நடைபெறும் பொருட்டும் M/S சரம் என்விரோ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட், சென்னை நிறுவனத்திற்கு தற்போது வழங்கி வரும் அதே தினக்கூலி தொகை ரூ.509/- (EPF, ESI உட்பட) அடிப்படையில் |

| | |
|---|---|
| | 01.01.2023 முதல் 31.01.2023 வரை 31 நாட்களுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.28.00 இலட்சத்திற்கு (ரூபாய் இருபத்துஎட்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. ஒப்பந்தம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.28.00/- இலட்சம் வருவாய் நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதி மூலம் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.977/2017/எச்1)<br>**தீர்மானம் எண்**:237 .<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **05).** | திண்டிவனம் நகராட்சியில் உள்ள 33 வார்டுகளிலும் M/S கிரீன் அக்ரோ என்விரான்மென்ட் சர்வீசஸ், மதுராந்தகம் என்ற நிறுவனத்தின் மூலம் நவம்பர் 2022 முதல் டிசம்பர் 2022 வரை நாளொன்றுக்கு நபர் ஒன்றுக்கு ரூ.398/- என்ற அடிப்படையில் 60 DBC பணியாளர்களை கொண்டு பணி மேற்கொள்ள இந்நகர மன்ற தீர்மான எண் 167, நாள்.28.09.2022 அன்று ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்போது மேற்படி ஒப்பந்த காலம் டிசம்பர் 2022ல் முடிவடைவதால் எதிர் வரும் ஜனவரி, பிப்ரவரி மற்றும் மார்ச் **2023** வரை 3 மூன்று மாதங்களுக்கு ஒப்பந்த நீட்டிப்பு செய்யவும், அதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.25.00 இலட்சம் பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. ஒப்பந்தம் நீட்டிப்பு செய்ய மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி மதிப்பீட்டு தொகை ரூ.25.00/- இலட்சம் பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4144/2022/எச்1)<br>**தீர்மானம் எண்**:238 .<br>**அனுமதிக்கப்பட்டது.** |

06). இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளுக்கு பயன்படுத்தப்படும் நீர்த்த சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடர், முதிர் கொசுக்களை அழிப்பதற்கும், கொசு புழுக்களை அழிப்பதற்கும் தேவையான பொருட்களை சப்ளை செய்திடவும், பழுது நீக்கம் செய்திடவும் 14.12.2022 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்காணும் விபரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவற்றினை மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | நீர்த்த சுண்ணாம்பு 1கிலோவின் விலை | பிளிச்சிங் பவுடர் 1கிலோவின் விலை | *Hand Fogging Machine Small* (பழுது நீக்கம்) 1-க்கு | *Mega Fogging (Vehicle Mountain)* (பழுது நீக்கம்) 1-க்கு | *Hand spray* (பித்தளை) *Machine* (புதியதாக) 1-க்கு |
|---|---|---|---|---|---|---|
| 1 | SRI TANUSHREE ENTERPRISES NO.44/31,PILLAYAR KOVIL STREET,GIDANGAL-1,TINDIVANAM | ரூ.5.75 /- | ரூ.34.00/- | ரூ.24,000/- | ரூ.1,15,000/- | ரூ.15,350/- |
| 2 | SRI SABTHAGIRI INDUSTRIES. NO.105/5, SEDARAPET IN ROAD, SEDARAPET, PUDHUCHERRY | ரூ.6.75/- | ரூ.38.00/- | ரூ.26,000/- | ரூ.1,30,000/- | ரூ.17,350/- |
| 3 | HARISH STORE, NO.126, NEHRU STREET, TINDIVANAM. | ரூ.6.25/- | ரூ.36.00/- | ரூ.25,500/- | ரூ.1,25,000/- | ரூ.16,750/- |

<u>அலுவலக குறிப்பு</u> :-

1. மேற்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1-ல் உள்ள SRI TANUSHREE ENTERPRISES, NO.44/31,PILLAYAR KOVIL STREET,GIDANGAL-1,TINDIVANAM -604 001. என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகள் முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 2128/2020/எச்1)

**தீர்மானம் எண்:239 .**

**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 07). | திண்டிவனம் நகராட்சி பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் மக்கும் குப்பை, மக்காத குப்பை என தரம் பிரித்து அனைத்து வீடுகளிலும் வாங்குவதற்கு பயன்படுத்தப்படும் பேட்டரி வாகனம் (BOV)-33 எண்ணிக்கை வாங்கப்பட்டது. தற்போது 15 பேட்டரி வாகனங்கள் மட்டுமே பயன்படுத்தும் வகையில் நல்ல நிலையில் உள்ளது. மீதமுள்ள 18 வாகனங்கள் பழுது நீக்கம் செய்ய இயலாத நிலையில் பயன்படுத்தப்படாமல் உள்ளது. மேலும், தற்போது பயன்பாட்டில் உள்ள 15 பேட்டரி வாகனங்களும் (BOV) அடிக்கடி பழுது ஏற்பட்டு ஆங்காங்கே நின்று விடுகிறது. இதனால் பொது சுகாதார பணிகளில் தொய்வு ஏற்பட்டு நகர் மன்ற உறுப்பினர்களின் மத்தியிலும் பொது மக்களிடமும் நகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் நிலை உள்ளது.<br>எனவே, மேற்படி வாகனங்களை 01.12.2022 முதல் 30.11.2023 வரை ஆண்டு பராமரிப்பு பணி (AMC) மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 (ஐந்து இலட்சம் மட்டும்) திடக்கழிவு மேலாண்மை கட்டண நிதியின் (SUC) மூலம் செலவினம் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. மேற்படி பணிகள் முக்கியத்துவம் வாய்ந்த பணி என்பதால் மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண். 4236/2022/எச்1)<br>**தீர்மானம் எண்:240 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 08). | இந்நகராட்சியால் வசூலிக்கப்படும் மாதாந்திர கடை வாடகை உரிமங்கள் மார்ச் 2023 உடன் முடிவடைய உள்ளது. மேற்படி கடைகளுக்கு 2023–2024 முதல் 2025–2026 வரை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை உரிமம், அரசாணை எண் 92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 03.07.2007ல் தெரிவித்துள்ளப்படி குத்தகை உரிமம் புதுப்பிக்கும் போது பழைய கேட்புடன் ஆண்டொன்றுக்கு 5 சதவீதம் வீதம் வாடகை உயர்த்தி மூன்று ஆண்டுகளுக்கு 15 சதவீதம் கேட்பு உயர்த்தி உரிமம் புதுப்பிக்குப்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>இந் நகராட்சியில் மொத்தம் 72 மாதாந்திர கடை வாடகை கேட்புகள் உள்ளன. இவற்றில் உழவர் சந்தை தவிர மீதமுள்ள 71 மாதாந்திர கடை வாடகை பழைய கேட்புடன் 15 சதவீதம் வாடகை உயர்த்தி அதனுடன் 18% GST சேர்த்து கடை வாடகையை உயர்த்தி வாடகை கீழ்க்கண்டவாறு உயர்வு செய்யப்பட்டுள்ளது.<br>எனவே கடை வாடகை உயர்த்தப்பட்ட விவரத்தை உரிமம்தாரர்களுக்கு தெரிவிக்கவும், உரிமம் புதுப்பிக்க புதுப்பித்தல் கட்டணம், கூடுதல் டெபாசிட் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளலாம். உயர்த்தப்பட்ட வாடகை விவரங்களை மன்றத்தில் பதிவு செய்யவும் வேண்டப்படுகிறது. |

| வ. எண் | கடையின் விவரம் | கடை எண் | கடை உரிமம் தாரர் பெயர் (திருவாளர்கள்) | வரி விதிப்பு எண் | பழைய கேட்பு தொகை | GST தொகை 18% | பழைய கேட்பின் மொத்த வாடகை | புதிய கேட்பு தொகை | GST தொகை 18% | புதிய கேட்பின் மொத்த தொகை | கூடுதலாக உயர்த்தப்பட்ட வாடகை தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 1 | H. சாதிக் பாட்சா | 043/422 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 2 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 2 | M.D. சுரேஷ் | 043/523 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 3 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 3 | S. ஏகாம்பரம் | 043/423 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 4 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 4 | V.பாஸ்கரன் | 043/499 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 5 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 5 | S.E.கார்த்திக் | 043/425 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 6 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 6 | மல்லிகா க/பெ.வேலு | 043/500 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 7 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 7 | பெரிய நாயகி / ராஜமூர்த்தி | 043/501 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 8 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 8 | கோபி/ராம கிருஷ்ணன் | 043/502 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 9 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 9 | M.லோகநாதன் | 043/429 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 10 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 10 | அன்பு/ பத்மநாபன் | 043/430 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 11 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 11 | சௌகத் அலி / அப்துல் சுபான் | 043/431 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 12 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 12 | R.சுதா | 043/432 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 13 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 13 | K.ரமேஷ்ராஜ் | 043/433 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| 14 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 14 | K.கார்த்திக் | 043/434 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 15 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 15 | A.முகம்மது அலி | 043/503 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 16 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 16 | நடராசன் /வேணு | 043/504 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 17 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 17 | D.நவீன் குமார் | 043/437 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 18 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 18 | கருணாகரன் /பக்தவச்சலம் | 043/505 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 19 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 19 | K.பாலசுப்ரம ணியன் | 043/506 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 20 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 20 | காந்திமதி / ராஜேந்திரன் | 043/507 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 21 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 21 | கே.சாமிக்க ண்ணு | 043/440 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 22 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 22 | A.ஜெயலட்சு மி | 043/441 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 23 | செஞ்சி ரோடு ஐ.யு.டி.பி கடைகள் | 23 | ராஜேஷ்குமார் / விஜயகுமார் | 043/508 | 6989 | 1258 | **8247** | 8037 | 1447 | **9484** | **1237** |
| | 24 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 1 | K.ராமானுஜம் | 043/447 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 25 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 2 | அஷ்ரப் அலி / ஆரிபுல்லா | 043/509 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 26 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 3 | மணிமாறன்/ ராமநாதன் | 043/510 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 27 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 4 | செல்வி/ ராஜேந்திரன் | 043/449 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 28 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 5 | R.ராஜேந்திர ன் | 043/450 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 29 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 6 | வி.சாந்தி | 043/451 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 30 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 7 | R.P.குணசே கரன் | 043/452 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 31 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 8 | R.மகேஷ் | 043/453 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 32 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 9 | S.யாசின் | 043/454 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 33 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 10 | பெரியசாமி | 043/455 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 34 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 11 | M.பெரியசாமி | 043/456 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 35 | செஞ்சி ரோடு IDSMT கடைகள் | 12 | எம்.ராதா | 043/457 | 6900 | 1242 | **8142** | 7935 | 1428 | **9363** | **1221** |
| | 36 | சேர்மன் வைத்தியலிங்கம் காய்கறி நாளங்காடி கடைகள் | 1 | கே.சேகர் | 043/60 | 11374 | 2047 | **13421** | 13080 | 2354 | **15434** | **2013** |
| | 37 | சேர்மன் வைத்தியலிங்கம் காய்கறி நாளங்காடி கடைகள் | 2 | சத்தியா | 043/497 | 11374 | 2047 | **13421** | 13080 | 2354 | **15434** | **2013** |
| | 38 | சேர்மன் வைத்தியலிங்கம் காய்கறி நாளங்காடி கடைகள் | 3 | லட்சுமி காந்தன் | 043/589 | 13079 | 2354 | **15433** | 15041 | 2707 | **17748** | **2315** |
| | 39 | சேர்மன் வைத்தியலிங்கம் காய்கறி நாளங்காடி கடைகள் | 4 | P.ஸ்டாலின் | 043/63 | 11374 | 2047 | **13421** | 13080 | 2354 | **15434** | **2013** |
| | 40 | சேர்மன் வைத்தியலிங்கம் காய்கறி நாளங்காடி கடைகள் | 5 | C.தேவராஜன் | 043/64 | 23000 | 4140 | **27140** | 26450 | 4761 | **31211** | **4071** |
| | 41 | சேர்மன் வைத்தியலிங்கம் காய்கறி நாளங்காடி கடைகள் | 6 | மதுரம்மாள் /சௌந்திரபாண்டியன் | 043/498 | 4600 | 828 | **5428** | 5290 | 952 | **6242** | **814** |
| | 42 | சேர்மன் வைத்தியலிங்கம் காய்கறி நாளங்காடி கடைகள் | 7 | சி.ஜமுனாராணி | 043/69 | 4600 | 828 | **5428** | 5290 | 952 | **6242** | **814** |

| | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 43 | சேர்மன் வைத்தியலிங் கம் காய்கறி நாளங்காடி கடைகள் | 8 | M.செங்கல்வரா யக் கவுண்டர் | 043/70 | 4600 | 828 | **5428** | 5290 | 952 | **6242** | **814** |
| | 44 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 1 | G.சரவணன் | 043/512 | 8050 | 1449 | **9499** | 9258 | 1666 | **10924** | **1425** |
| | 45 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 2 | N.முபாரக் அலி | 043/471 | 8050 | 1449 | **9499** | 9258 | 1666 | **10924** | **1425** |
| | 46 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 3 | N.முபாரக் அலி | 043/491 | 8050 | 1449 | **9499** | 9258 | 1666 | **10924** | **1425** |
| | 47 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 4 | T.தாமோதரன் | 043/472 | 8050 | 1449 | **9499** | 9258 | 1666 | **10924** | **1425** |
| | 48 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 5 | நூா.சபியாபீ | 043/513 | 8050 | 1449 | **9499** | 9258 | 1666 | **10924** | **1425** |
| | 49 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 6 | சற்குணம் க/பெ.வெங்க டேசன் | 043/444 | 8050 | 1449 | **9499** | 9258 | 1666 | **10924** | **1425** |
| | 50 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 7 | A.சீனுவாசன் | 043/475 | 8050 | 1449 | **9499** | 9258 | 1666 | **10924** | **1425** |
| | 51 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 8 | A. ஜலாலுதீன் | 043/476 | 8050 | 1449 | **9499** | 9258 | 1666 | **10924** | **1425** |
| | 52 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 9 | புஷ்பராஜ் / சுப்ரமணி | 043/604 | 3450 | 621 | **4071** | 3968 | 714 | **4682** | **611** |
| | 53 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 10 | சீனுவாசன் / ஆறுமுகம் | 043/602 | 3450 | 621 | **4071** | 3968 | 714 | **4682** | **611** |
| | 54 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 11 | P.ரங்கநாதன் | 043/597 | 3450 | 621 | **4071** | 3968 | 714 | **4682** | **611** |
| | 55 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 12 | R.வெங்கடேச ன் | 043/600 | 3450 | 621 | **4071** | 3968 | 714 | **4682** | **611** |
| | 56 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 13 | செல்வகுமார் | 043/603 | 3450 | 621 | **4071** | 3968 | 714 | **4682** | **611** |
| | 57 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 14 | அப்பாஸ் மந்திரி | 043/595 | 3450 | 621 | **4071** | 3968 | 714 | **4682** | **611** |
| | 58 | ஒ.பி.ஆர் பார்க் கடைகள் | 15 | S.சரோஜினி | 043/596 | 3450 | 621 | **4071** | 3968 | 714 | **4682** | **611** |
| | 59 | பர்மா பெட்டிக் கடைகள் | 1 | N.சுப்பைய்யா | 043/411 | 1150 | 207 | **1357** | 1323 | 238 | **1561** | **204** |
| | 60 | பர்மா பெட்டிக் கடைகள் | 2 | கிருஷ்ணன் நம்பூதிரி | 043/410 | 1150 | 207 | **1357** | 1323 | 238 | **1561** | **204** |
| | 61 | பர்மா பெட்டிக் கடைகள் | 3 | கண்ணா( எ)சரோஜா | 043/494 | 1150 | 207 | **1357** | 1323 | 238 | **1561** | **204** |

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **62** | பர்மா பெட்டிக் கடைகள் | **4** | K.G. சௌந்திர பாண்டியன் | 043/588 | 1150 | 207 | **1357** | 1323 | 238 | **1561** | **204** |
| **63** | பர்மா பெட்டிக் கடைகள் | **5** | R. குமாரவேல் | 043/493 | 1150 | 207 | **1357** | 1323 | 238 | **1561** | **204** |
| **64** | பர்மா பெட்டிக் கடைகள் | **6** | T. ராஜசக்தி | 043/412 | 1150 | 207 | **1357** | 1323 | 238 | **1561** | **204** |
| **65** | பெட்டிக் கடைகள் | **1** | R. மூர்த்தி | 043/522 | 12305 | 2215 | **14520** | 14151 | 2547 | **16698** | **2178** |
| **66** | பெட்டிக் கடைகள் | **2** | லட்சுமி / கஜேந்திரன் | 043/361 | 3306 | 595 | **3901** | 3802 | 684 | **4486** | **585** |
| **67** | பெட்டிக் கடைகள் | **3** | D.சத்தியமூர்த்தி | 043/359 | 1150 | 207 | **1357** | 1323 | 238 | **1561** | **204** |
| **68** | பெட்டிக் கடைகள் | **4** | D.புருஷோத்தமன் | 043/360 | 3220 | 580 | **3800** | 3703 | 667 | **4370** | **570** |
| **69** | பெட்டிக் கடைகள் | **5** | K.ரகுநாதன் | 043/358 | 2645 | 476 | **3121** | 3042 | 547 | **3589** | **468** |
| 70 | பெட்டிக் கடைகள் | **6** | பாலு (எ) பாலமுருகன் | 043/375 | 2645 | 476 | **3121** | 3042 | 547 | **3589** | **468** |
| 71 | பெட்டிக் கடைகள் | 7 | தாஜிதீன் | 043/786 | **2645** | **476** | **3121** | 3042 | 547 | **3589** | **468** |

உயர்த்தப்பட்ட வாடகை, உரிமதாரர்களுக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்ளலாம். உரிமம் புதுப்பிக்க விருப்பமில்லாத உரிமதாரர்களின் கடை உரிமத்தை ரத்து செய்து புதியதாக ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேலும், கடை உரிமதாரர் அல்லாதோரின் கடையினை கண்டறிந்து, அக்கடைகளை மறு ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளலாம். மேலும் கடை உரிமம் புதுப்பிக்கும் போது ரூ. 20 மதிப்புள்ள முத்திரைத்தாள் உறுதிமொழி, ஆணையரால் ஏற்கனவே உரிமம் வழங்கப்பட்ட செயல்முறை உத்தரவு நகல், மார்ச் 2023 வரை செலுத்திய கடை வாடகை ரசீது நகல், உரிமதாரரின் புகைப்படம் –2, புதுப்பித்தல் கட்டணம் ரூ. 500 மற்றும் நகராட்சியால் தெரிவிக்கப்படும் கூடுதல் டெபாசிட் செலுத்திய ரசீது நகல், குத்தகைதாரரின் குடும்ப அட்டை, ஆதார் கார்டு மற்றும் பான்கார்டு நகல், தொழில் வரி செலுத்திய ரசீது நகல் ஆகியவைகளை 31.01.2023க்குள் நகராட்சி அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும், தவறும் பட்சத்தில் குத்தகை விதிகளின்படி குத்தகை உரிமம் ரத்து செய்யப்பட்டு மறு ஏலம் விடவும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.
2. உயர்த்தப்பட்ட வாடகையினை உரிமம்தாரர்களுக்கு அறிவிப்பு கடிதம் அனுப்பி நடவடிக்கை மேற்கொள்வதை மன்றம் அனுமதிக்கலாம். உரிமம் புதுப்பிக்க விருப்பமில்லாத உரிமததாரர்களின் கடை உரிமத்தை ரத்து செய்து புதியதாக ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்வதையும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. கடை உரிமதாரர் அல்லாதோரின் கடையினை கண்டறிந்து, அக்கடைகளை மறு ஏலம் விட நடவடிக்கை மேற்கொள்ளலாம்.
4. கடை உரிமம் புதுப்பிக்கும் போது ரூ. 20 மதிப்புள்ள முத்திரைத்தாள் உறுதிமொழி,

ஆணையரால் ஏற்கனவே உரிமம் வழங்கப்பட்ட செயல்முறை உத்தரவு நகல், மார்ச் 2023 வரை செலுத்திய கடை வாடகை ரசீது நகல், உரிமதாரரின் புகைப்படம் –2, புதுப்பித்தல் கட்டணம் ரு. 500 மற்றும் நகராட்சியால் தெரிவிக்கப்படும் கூடுதல் டெபாசிட் செலுத்திய ரசீது நகல், குத்தகைதாரரின் குடும்ப அட்டை, ஆதார் கார்டு மற்றும் பான்கார்டு நகல், தொழில் வரி செலுத்திய ரசீது நகல் ஆகியவைகளை 31.01.2023க்குள் நகராட்சியில் சமர்ப்பிக்காத குத்தகைதாரரின் குத்தகைவிதிகளின்படி குத்தகை உரிமம் ரத்து செய்து மறு ஏலம் விடவும் நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

(ந.க.எண். 1041/2020/அ1)

**தீர்மானம் எண்:241.**

**பதிவு செய்யப்பட்டது,**

**09).** இந்நகராட்சியில் செஞ்சிரோட்டில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு தேவையான மளிகைப் பொருட்களை சப்ளை செய்யும் பணிக்கு விலைப்புள்ளி 05.12.2022 அன்று கோரியதில் கீழ்காணும் விபரப்படி முன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. அவற்றின மீது முடிவு செய்ய மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எ ண் | பொருட்களின் விவரம் | நிறுவனத்தின் பெயர் | | |
|---|---|---|---|---|
| | | **A.K.R. மளிகை** நெ.128, செஞ்சி ரோடு, திண்டிவனம். | **KSS சூப்பர் மார்க்கெட்** நெ.136,நேரு வீதி, திண்டிவனம். | **DMS மளிகை,** D.மெய்யழகன் ஸ்டோர்ஸ், 409,நேருவீதி,திண்டிவனம். |
| 1 | மஞ்சள் தூள் | 160 | 170 | 160 |
| 2 | வரமிளகாய் | 380 | 380 | 340 |
| 3 | கடுகு | 140 | 140 | 110 |
| 4 | LG பெருங்காயம் | 62 | 62 | 62 |
| 5 | சக்தி மசாலா சாம்பார்பொடி | 380 | 380 | 340 |
| 6 | சக்தி குழம்பு மிளகாய் தூள் | 350 | 360 | 240 |
| 7 | துணி சோப்பு | 9.00 | 10 | 9.00 |
| 8 | பெருஞ்சீரகம் | 240 | 300 | 300 |
| 9 | துவரம்பருப்பு | 125 | 125 | 120 |
| 10 | பாசி பருப்பு | 104 | 104 | 100 |
| 11 | பாமாயில் | 102 | 100 | 100 |
| 12 | உளுந்து | 125 | 124 | 120 |
| 13 | வெந்தயம் | 100 | 110 | 110 |
| 14 | தனி மிளகாய் தூள் | 420 | 420 | 420 |
| 15 | ஜவ்வரிசி | 80 | 90 | 90 |

| | | | | |
|---|---|---|---|---|
| 16 | லைசால் 200 ML | 98 | 98 | 98 |
| 17 | தூள் உப்பு | 15 | 13 | 13 |
| 18 | தீப்பெட்டி | 10 | 10 | 9.00 |

**அலுவலக குறிப்பு** :-

1. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் **DMS மளிகை, D.மெய்யழகன் ஸ்டோர்ஸ், 409, நேரு வீதி, திண்டிவனம்.** நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதால் அவற்றினை ஏற்று வேலை உத்தரவு வழங்க மன்றம்அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4499/2022/எச்2)

**தீர்மானம் எண்:242.**

**அனுமதிக்கப்பட்டது.**

**10).** திண்டிவனம் நகராட்சி 2022-ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டம் 2.0 திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் மத்திய அரசின் MOHUA துறையின் மூலம் STAR RATING ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் வழங்கி வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக திண்டிவனம் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை, திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி முறையே தரம் பிரித்து கையாளப்பட்டு வருகிறது. மேலும் இரண்டாம் நிலை சேகரிப்பு (Secondary Storage) மற்றும் குப்பைத் தொட்டிகள் மூலம் திடக்கழிவுகளை அகற்றம் செய்வது (Bin Free City) முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே திண்டிவனம் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free City) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) என அறிவிக்கவும். இது சம்பந்தமான நகராட்சி அறிவிப்பினை பொது மக்களின் ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் கோரி ஏதேனும் இரண்டு தினசரி தமிழ் நாளிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** :-

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகரமன்ற தலைவர் முன்அனுமதி பெற்று நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

நக.எண்.2886/2015/எச்1

**தீர்மானம் எண்:243.**

**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 11). | திண்டிவனம் நகராட்சி 2022-ம் ஆண்டு திறந்த வெளியில் கழிப்பிடமாக பயன்படுத்தும் நிலை இல்லையென்று சான்று மத்திய அரசின் நகர்புறம் மற்றும் வீட்டு வசதி அமைச்சகத்தின் சான்று பெற்றுள்ளது. தற்போது இந்நகரில் தனிநபர் கழிப்பறைகள் கட்டுதல், சமுதாய கழிப்பறைகள் கட்டுதல் ஆகிய பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. திறந்தவெளி கழிப்பிடங்களற்ற நகரம் (ODF+TOWN) என அறிவிக்கவும். இது சம்பந்தமான நகராட்சி அறிவிப்பினை பொது மக்களின் ஆலோசணைகள் மற்றும் ஆட்சேபணைகள் கோரி ஏதேனும் இரண்டு தினசரி தமிழ் நாளிதழில் வெளியிட்டு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. **மேற்கண்ட செலவினத்தை நகரமன்ற தலைவர் முன்அனுமதி பெற்று நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.**<br>நக.எண்.2885/2015/எச்1<br>**தீர்மானம் எண்:244 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 12). | இந்நகராட்சியில் குடிநீர் விநியோகத்தில் மேல் நீர் தேக்க தொட்டிகள் ,திறந்த வெளி கிணறுகள் மற்றும் சின்டெக்ஸ் தொட்டிகள் ஆகியவற்றில் குளோரினேஷன் செய்ய பயன்படுத்தப்படும் பிளிச்சிங் பவுடர் இருப்பு குறைவாக உள்ளதால் 2000 கிலோ பிளிச்சிங் பவுடர் வாங்க, தமிழ்நாடு மல்டிபர்ப்போஸ் இண்ட்கோ நிறுவனம் மூலம் பெற மதிப்பீடு தொகை ரூ.94400/- நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>**1.** மன்றம் பதிவு செய்யலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண் : 5713 /இ2/2022<br>**தீர்மானம் எண்:245 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 13). | திண்டிவனம் நகராட்சிக்கு சொந்தமான ஜெ.சி.பி (JCB Hitachi BS Hoe TN 16G 0048 வாகனத்திற்கு சிறு வாளி (Small Bucket) வாங்குதல் பணி நகரமன்ற தீர்மான எண் 60 நாள் 26.08.2022 –ல் தொகை ரூ.30000/- மன்ற தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து. மேலும் சிறுவாளி வாங்கப்பட்டதற்கான (GST,SGST) சேவைக்கட்டணம் மற்றும் சேவைவரி ஆகிய விலைப்பட்டியலுடன் தொகை ரூ.44587/கூடுதலாக வரப்பெற்றுள்ளதால்,மேலும் கூடுதல் தொகையாக ரூ.14587/- பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே பட்டியல் தொகை வழங்குவதற்கு கூடுதல் செலவினத் தொகையை மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>**தீர்மானம் எண்**: 246.<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 14). | தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்படவுள்ள காவேரியாற்று நீரை ஆதாரமாக கொண்டு அமைக்கப்படும் கூட்டுக் குடிநீர் திட்டத்தில் , திண்டிவனம் நகராட்சிக்கு குடிநீர் மற்றும் அதனை சார்ந்த உள்கட்டமைப்பு வசதிகள் கீழ்கண்டவாறு செய்து தந்திடவும், அதற்குண்டான திட்ட மதிப்பீடு தொகையினை செலுத்திடவும் மற்றும் திட்ட மதிப்பீடு தயார் செய்திட ஆகும் ஆய்வு கட்டணத்தை செலுத்திடவும், திட்ட பயன்பாட்டின் போது குடிநீர் கட்டணமாக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு திண்டிவனம் நகராட்சி செலுத்த வேண்டிய மாதாந்திர தொகையினை செலுத்திடவும், மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.<br>கூட்டுக்குடிநீர் திட்டத்தில் திண்டிவனம் நகராட்சிக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள குடிநீர் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் விவரங்கள் கீழ்வருமாறு:– |

| வ. எண் | பொருளடக்கம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | ஏற்கனவே வழங்கக்கூடிய குடிநீரின் அளவு | 5.81 MLD |
| 2 | தற்போது வழங்கப்பட வேண்டிய குடிநீரின் அளவு | 2026 2041 2056<br>7.45 8.99 10.54 |
| 3 | புதிய மேல்நிலை நீர்தேக்கதொட்டிகள் | தற்போது தேவையில்லை. போதுமானதாக உள்ளது. |
| 4 | தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் | 1) 18.34 LL –Thiruvalluvar Nagar<br>2) 22.85 LL –Wahaf nagar |
| 5 | மின்மோட்டார் | Thiruvalluvar Nagar 3280LPMx44m Head(1+1)<br>Wahaf Nagar 6095LPMx39m Head(1+1) |
| 6 | பம்பு ரூம் (மின்மோட்டார் அறை) | 6 x 4 – 2 எண்ணம் |
| 7 | சுற்று சுவர் | 40 x 30 – 2 எண்ணம் |

| | | |
|---|---|---|
| 8 | நீர்த்தேக்க தொட்டியின் ஏற்கனவே உள்ள (Inter connection) குழாய் இணைப்பு | 4 எண்ணம் |
| 9 | குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் வீட்டிணைப்புகள் பதித்தல் | புதிய மனைபிரிவுகள் மற்றும் விடுப்பட்ட பகுதிகளுக்கு நகராட்சி மூலம் பணி மேற்கொள்ளப்படும். |

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் கூட்டு குடிநீர் திட்ட மதிப்பீடு தயார் செய்திட ஆய்வு கட்டணத்தை செலுத்திட மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தை அவசிய அவசரம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:247.**

**அனுமதிக்கப்பட்டது.**

**15).**

திண்டிவனம் நகராட்சியில் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 72796 மக்கள் தொகை உள்ளனர், இந்நகராட்சி தேர்வு நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. தற்போது மூன்று தலைமை குடிநீர் நீரேற்று நிலையங்களில் இருந்து குடிநீர் உந்தப்பட்டு 10 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மூலம் தண்ணீர் சேகரிக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்போது விநியோகிக்கும் குடிநீரின் அளவு 5.4 MLD, மேலும் ஒரு நபருக்கு ஒரு நாளைக்கு வழங்கப்பட வேண்டிய 90 LPCDக்கு குறைவாக 74 LPCD மட்டுமே மூன்று நாளுக்கொரு முறை வழங்கப்படுகிறது. மேற்படி 10 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் அகழிகுளம் 1 இலட்சம் லிட்டர் மற்றும் தீர்த்த குளம் 5 இலட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர் தேக்க தொட்டிகள் குடிநீர் பற்றாக்குறை காரணமாக நீரேற்றாமல் உள்ளதால், உள்ளூரில் நீராதாரம் கண்டறிந்து மேற்படி இரண்டு நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றவும், மற்றும் அனைத்து வார்டுகளுக்கும் தினசரி குடிநீர் வழங்க எதுவாக குடிநீர் பைப்லைன் இல்லாத பகுதிகளை கண்டரிந்து குழாய் பதிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ள உரிய பிரேரணை தயார் செய்து அனுப்பிவைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் இந்நகராட்சியில் 26.11.2022 அன்று நேரடி ஆய்வின் போது அறிவுறுத்தியுள்ளார்.

அதன்பேரில் பொறியியல் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திட்ட பகுதியின் நிலப்பரப்பின் ஆய்வு (Topographical Survey), மக்கள்தொகைக்கேற்றவாறு திட்ட வடிவமைப்பு (Population Projection for Design), நீர் தேவையின் மதிப்பு விரிவான குடிநீர் விநியோக அமைப்பு (Water Demand Estimate), வரைபடம் (Drawing), விலைவிகித பகுப்பாய்வு (Rate Analysis Data), விரிவான திட்ட மதிப்பீடு (Detailed Estimate), ஒப்பந்தப்புள்ளி ஆவணம் (Bid Document), நிர்வாக அனுமதி (Administration Sanction), தொழில்நுட்ப அனுமதி (Technical Sanction) பெறுதல், இப்பணியை சார்ந்த இதரப்பணிகள் (Component authorities Remarks and

| | |
|---|---|
| | Quarries) மற்றும் புத்தக நகல்கள் மூன்று மற்றும் மென்நகல் (Soft Copy) ஆகியவை குடிநீர் திட்ட பிரேரணை தயாரிக்க தொழில்நுட்ப ஆலோசகர்(Consultant) நியமனம் செய்து திட்ட பிரேரணை தயாரிக்க மதிப்பீட்டு தொகையில் 2% தொகையை மேற்கண்டவாறு நியமனம் செய்யப்படும் தொழில்நுட்ப ஆலோசகருக்கு (Consultant) வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5975 /இ2/2022<br>**தீர்மானம் எண்:248 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **16).** | நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் ந.க.எண்.22083/2022/எஸ்.பி.எம்2, நாள்.13.12.2022-ல் தூய்மை இந்தியா திட்டம் 2.0 நிதியின் கீழ் திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் நுண்ணுரம் தயாரிக்கும் மையங்களில் சேகரிக்கப்படும் மறுசுழற்ச்சிக்கேற்ற (பேப்பர், பிளாஸ்டிக், உலேகங்கள், கண்ணாடி மற்றும் துணிகள்) இரண்டு எண்ணம் பொருட்கள் மீட்பறை கட்டுதல் பணிக்கு ரூ.85.00 இலட்சம் (மத்திய அரசு பங்களிப்பு 50% ரூ.43.00 இலட்சம், மாநில அரசு பங்களிப்பு 33% ரூ.28.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு 17% ரூ.14.00 இலட்சம்) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதற்கு மதிப்பீடு தயார் செய்து வழங்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>அதன்படி பின்வருமாறு இரண்டு நுண்ணுர மையங்களில் பொருட்கள் சேகரிக்கும் அறை அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது.<br><table><tr><th>வ. எண்</th><th>மையத்தின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை<br>ரூபாய் இலட்சத்தில்.</th></tr><tr><td>1</td><td>சலவாதி சாலை நுண்ணுர மையம் - 1</td><td>42.50</td></tr><tr><td>2</td><td>சலவாதி சாலை நுண்ணுர மையம் - 2</td><td>42.50</td></tr><tr><td></td><td>**மொத்தம்**</td><td>**85.00**</td></tr></table>எனவே, மேற்கண்ட பணிக்கு விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர் அவர்களுக்கு நிர்வாக அனுமதி பெற அனுப்ப மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1) மேற்படி தூய்மை இந்தியா திட்டம் 2.0 நிதியின் கீழ் நிர்வாக அனுமதி பெற மதிப்பீடு தயார் செய்து அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி |

<table>
<tr><td></td><td>நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 3033 /2022/இ1)<br>தீர்மானம் எண்:249.<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
<tr><td>17).</td><td>திண்டிவனம் நகராட்சி என்பது சென்னை-திருச்சி NH சாலையில் [NH 45] அமைந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தேர்வு நிலை நகராட்சி ஆகும். இது தேசிய நெடுஞ்சாலை மற்றும் பிற மாவட்ட சாலைகளால் இணைக்கப்பட்டுள்ளது. திண்டிவனம் நகராட்சி 22.33 சதுர கிலோ மீட்டர் மற்றும் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி, மக்கள் தொகை 72796, மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 33 ஆகும். 70.00 கிமீ நீளமுள்ள மழை நீர் வடிகால்வாய் நகராட்சியால் பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது. இந்நகராட்சிக்குட்ப்பட்ட சாலையின் மொத்த நீளம் 156.073 கி.மீ ஆகும். இதில் தார்சாலை 40.467 கி.மீட்டர் ,சிமெண்ட் கான்கிரீட் சாலை 61.994 கி.மீ,பேவர் பிளாக் சாலை 0.777 கி.மீ, மற்றும் மண் சாலை 52.833 கி.மீ கொண்டதாகும். மேலும், மழை நீர் வடிகால்வாயின் மொத்த நீளம் 65.394 கி.மீ, சிறுபாலங்கள் 419 எண்ணிக்கைகள் உள்ளது. மேற்கண்ட சாலைகள், மழைநீர் வடிகால்வாய்கள் மற்றும் சிறுபாலங்கள் இந்நகராட்சியால் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>இந்நகராட்சிக்கு சொந்தமான ரெட்டணை, புளிச்சப்பள்ளம் (காட்ராம்பாக்கம் ) மற்றும் கண்டரக்கோட்டை தென்பெண்ணை ஆற்றில் இருந்து 3 எண்ணிக்கைகள் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கல் அமைப்பைக் கொண்டுள்ளது. குடிநீரின் முக்கிய ஆதாரங்கள் நகரத்திலிருந்து 12 கிமீ, 24.00 கிமீ மற்றும் 51.00 கிமீ தொலைவில் அமைந்துள்ள நீருந்து நிலையங்கள் மூலமும் மற்றும் நீரேற்று நிலையங்கள் மூலமும் குடிநீர் பம்பிங் செய்யப்பட்டு நகராட்சி பகுதிகளில் 10 OHTகள் நிறுவப்பட்டுள்ளன, மொத்த கொள்ளளவு 6.5 MLD. விநியோக மையத்தின் மொத்த நீளம் 79.00 கிமீ ஆகும். தினசரி சராசரி விநியோக அளவு 74 எல்பிசிடி வீதம் 54.00 லட்சம் லிட்டர்கள். நகராட்சியின் பராமரிப்பில் 146 கை பம்புகள் மற்றும் 172 மினி பம்புகள் உள்ளன. மேலும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் பராமரிப்பின் மூலம் வடவாம்பலம் குடிநீர் திட்டத்தின் கீழ் இந்நகராட்சிக்கு குடிநீர் விநியோகமும் செய்யப்பட்டு வருகிறது.<br>இந்நகராட்சியில் பின்வரும் தெருவிளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.<br><table><tr><td>1</td><td>40 வாட்ஸ் டியூப் லைட்ஸ்</td><td>1561</td></tr><tr><td>2</td><td>சோடியம் வேப்பர் விளக்குகள் 395 எண்கள்</td><td>264</td></tr><tr><td>3</td><td>. எல்.இ.டி</td><td>901</td></tr><tr><td>4</td><td>உயர் மின் கோபுர விளக்குகள்</td><td>88</td></tr><tr><td>5</td><td>T5 விளக்குகள்</td><td>11</td></tr></table></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 6 | சி.எப்.எல் | 130 |
| 7 | சோலார் விளக்குகள் | 25 |
| மொத்தம் | | 3018 |

3018 எண்ணிக்கைகள் உள்ளது. அவ்வப்போது வரப்பெறுகின்ற புகார்கள் சரிசெய்யப்பட்டு வருகிறது.

இந்நகராட்சியில் மேற்கண்ட சாலை பணிகள், மழைநீர் வடிகால்வாய், சிறுபாலங்கள், குடிநீர் விநியோகம் மற்றும் தெருவிளக்குகள் ஆகிய பணிகளை மேற்கொள்ளவும் பார்வையிடவும் இந்நகராட்சியில் நகராட்சி பொறியாளர் ஒருவரும், உதவி பொறியாளர் ஒருவரும் மற்றும் பணி ஆய்வர் ஒருவர் ஆகியோர் மட்டுமே மேற்கண்ட பணிகளை மேற்கொள்ளவும் பார்வையிடவும் உள்ளனர். நகராட்சி பொறியாளர், உதவி பொறியாளர் மற்றும் பணிஆய்வர் அணைவருக்கும் கோட்டக்குப்பம் நகராட்சியில் கூடுதல் பொறுப்பு பணி பார்த்து வருகிறார்கள். இவர்களுக்கு உதவியாக தொழில் நுட்ப பணியாளர்கள் யாரும் இல்லாததால் சாலைபணிகள், கட்டிட பணிகள் உள்ளிட்ட திட்டப்பணிகளை கண்காணிக்கவும், வளர்ச்சி பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யவும், அவ்வப்போது அரசு அனுமதிக்கும் திட்டங்களுக்கு மதீப்பிடு தயார் செய்து உடனுக்குடன் அனுப்பவும் மிகுந்த சிரமம் ஏற்படுகிறது. நகராட்சி நிர்வாக இயக்குநர் ,சென்னை அவர்களின் 26.11.2022 அன்று திண்டிவனம் நகராட்சியின் நேரடி ஆய்வின் போது, இரண்டு தொழில் நுட்ப பணியாளரை தனியார் நிறுவனத்தின் மூலம் (ஒப்பந்தப்புள்ளி அடிப்படையில்) மாவட்ட ஆட்சியரின் அங்கீகரிக்கப்பட்ட விலை விகிதத்தில் ஒப்பந்த அடிப்படையிலும் தினக்கூலி முறையிலும் தேர்வு செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள்.

எனவே, திட்ட பணிகளுக்கான விரிவான திட்ட அறிக்கைகள், முன் மொழிவுகள் தயார் செய்யவும், மதீப்பிடுகள் தயார் செய்யவும் உரிய கல்வி தகுதி மற்றும் முன் அனுபவம் பெற்றுள்ள தகுதி வாய்ந்த இரண்டு தொழில் நுட்ப பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் விழுப்புரம் அவர்களால் அங்கீரிக்கப்பட்ட விலை விகிதத்தின் படி தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமைத்து டிசம்பர் 2022 முதல் மார்ச் 2023 வரை பணிகள் மேற்கொள்ள ரூ.2.00 இலட்சத்திற்கு நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ஆணையரின் அனுமதிக்கு.

**அலுவலக குறிப்பு** :-

1.) மன்றம் அனுமதிக்கலாம்.

2.) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 1387/இ1/2022)

**தீர்மானம் எண்:250 .**

**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| 18). | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட செஞ்சி சாலை பேருந்து நிலையம் அருகில் அருகில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியில் உள்ள வால்வு தொட்டி மற்றும் வால்வுகள் பழுதடைந்துள்ளதால், அப்பகுதி பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளதால் சீரான குடிநீர் விநியோகம் செய்ய மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டியில் உள்ள வால்வு தொட்டி மற்றும் வால்வுகள் பழுதை சரி செய்ய மதிப்பீட்டு தொகை ரூ1.25/- இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணியினை மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 4406 /2022/இ2)<br>**தீர்மானம் எண்**:251.<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 19). | திண்டிவனம் நகராட்சி எல்லைக்குட்பட்ட திரு.க.நாராயணமூர்த்தி,எண்.3 கெங்கையம்மன் கோயில் தெருவில் வசித்து வருபவருக்கு சொந்தமான விவசாய நிலத்தில் உள்ள கிணற்றிலிருந்து வார்டு-4,பாரதிதாசன் நகரில் அமைந்துள்ள குடிநீர் மேல் நிலை தேக்க தொட்டிக்கு குடிநீர் நீரேற்றம் செய்வதற்கு 31.03.2022 வரை கால நீட்டிப்பு செய்து 3.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டது. தற்போது குடிநீர் பணிகள் அவசியம் கருதி பொதுமக்களின் நலத்தினை கருத்தில் கொண்டு மேற்படி கிணற்று நிரை வாடகை அடிப்படிடயில் குடிநீர் விநியோகம் செய்ய வேலை உத்திரவு 31.03.2023 வரை நீட்டிப்பு செய்வதற்கும் கூடுதலாக செலவின தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை அவசிய அவசரம் கருதி நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 5976 /2022/இ2)<br>**தீர்மானம் எண்**:252.<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 20). | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 04-ல் உள்ள பொதுகழிப்பிடத்திற்கு தண்ணீர் வசதி இல்லாததால் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்தி மற்றும் சின்டென்ஸ் டேங்க் அமைத்து தண்ணீர் வசதி செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.2,00/- இலட்சத்திற்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும் ) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும். மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5820 /இ2/2022<br>**தீர்மானம் எண்**:253 .<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 21). | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 09-ல் ஏரிக்கோடி குறுக்கு தெரு மூங்கிலம்மன் கோவில் தெரு, மற்றும் மூங்கிலம்மன் கோவில் குறுக்கு தெருவில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் இருந்து மினி டேங்க் மற்றும் மின் மோட்டார் வசதி செய்தல் மற்றும் பைப்லைன் அமைத்து தண்ணீர் வசதி செய்ய மதிப்பீட்டு தொகை ரூ.4.00/-இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும் ) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும். மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5819 /இ2/2022<br>**தீர்மானம் எண்**:254 .<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 22). | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் -09 ல் உள்ள மூங்கிலம்மன் கோயில் தெருவில் பாலாஜி ரைஸ்மில் அருகே ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறு பழுதடைந்துள்ளதல் , மேற்படி அதன் அருகில் ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ. 1.30/-இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்குரிய செலவினத்தை (ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை அவசிய அவசரம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5977/இ2/2022<br>**தீர்மானம் எண்:255 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 23). | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் -09 ல் உள்ள அய்யாசாமி தெருவில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணற்றில் புதியதாக டேங்க் அமைத்து மோட்டார் பொருத்தும் பணிக்கு மதிப்பீடு ரூ. 1.50 தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணிக்குரிய செலவினத்தை (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை அவசிய அவசரம் கருதி நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5978 /இ2/2022<br>**தீர்மானம் எண்:256 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| **24).** | திண்டிவனம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு- 21ல் கலைஞர் தெரு மற்றும் ராஜன் தெரு ஆகிய இரண்டு இடங்களில் ஏற்கனவே உள்ள சின்டெக்ஸ் நீர் தேக்க தொட்டியில் தண்ணீர் பிடிக்க பைப் லைன்கள் பழுதடைந்து உள்ளதால் புதியதாக பைப் லைன்கள் மாற்றி அமைப்பதற்கு மதீப்பீடு செலவினம் ரூ. 2.00/-இலட்சம் (இரண்டு இலட்சம்) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் ; 5979 /இ2/2022<br>**தீர்மானம் எண்:257 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **25).** | திண்டிவனம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு- 27ல் கசாமியன் தெரு , மற்றும் ஆர்.எஸ் பிள்ளை தெரு ஆகிய இடங்களில் ஏற்கனவே உள்ள சிறுமின்விசை பம்புவிற்கு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் அமைத்தும் பொருத்தும் பணிக்கு செலவினம் ரூ.3.00/- இலட்சம் (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் ; 5980 /இ2/2022<br>**தீர்மானம் எண்:258 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| **26).** | திண்டிவனம் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு-32 ரயில்வே ஓத்தவாடை தெருவில் ஏற்கனவே உள்ள சிறுமின் விசை பம்பு புதிய ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் பொருத்தும் பணிக்கு செலவினம் ரூ.1.50/- இலட்சம் (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5981/இ2/2022<br>**தீர்மானம் எண்:259 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| **27).** | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32ல் உள்ள மயிலம் சாலையில் உள்ள திறந்தவெளி கிணறு சுற்று சுவர் இல்லாமலும், பாதுகாப்பு வலை இல்லாத்தாலும் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பில்லாமல் உள்ளது எனவும், மேற்படி கிணற்றிற்கு சுற்று சுவர் மற்றும் பாதுகாப்பு வலை அமைத்து தருமாறு அப்பகுதி நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் ஆகியோர் நேரில் தெரிவித்ததை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டது. அதன்படி மேற்கண்ட பகுதியில் உள்ள கிணற்றிற்கு சுற்று சுவர் மற்றும் பாதுகாப்பு வலை அமைக்க ரூ.0.75 இலட்சத்திற்கு (ரூபாய் எழுபத்தைந்தாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :-<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5982 /இ1/2022<br>**தீர்மானம் எண்:260 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 28). | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11ல் உள்ள நகராட்சிக்கு சொந்தமான காவேரிப்பாக்கம் நகராட்சி பள்ளிக்கு பள்ளி மாணவ மாணவர்களின் பாதுகாப்பு கருதி சுற்றுசுவர் அமைக்குமாறு அப்பகுதி நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் ஆகியோர் நேரில் தெரிவித்ததை தொடர்ந்து நேராய்வு செய்யப்பட்டது. அதில் மேற்படி பள்ளிக்கு சுற்றுசுவர் அமைப்பது அவசியமாகிறது எனவே மேற்படி பள்ளிக்கு சுற்றுசுவர் அமைக்க ரூ.4.00 இலட்சத்திற்கு (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் :5983/இ2/2022<br>**தீர்மானம் எண்:261.**<br>**28.09.2022-ல் நகர மன்ற தீர்மானம் எண் 175, அனுமதிக்கப்பட்டது.**<br>**எனவே, இத்தீர்மானத்தினை ரத்து செய்யப்பட்டது.** |
| 29). | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11ல் உள்ள MRS தியேட்டர் )அருகில்) சேடன்குட்டை குறுக்கு தெருவில் உள்ள சிறுபாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால் பள்ளி மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் செல்வதற்கு மிகவும் சிரமமாக உள்ளதாகவும். மேற்படி அவற்றை இடித்துவிட்டு அந்த இடத்தில் புதியதாக சிறுபாலம் அமைத்து தருமாறு அப்பகுதி நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் ஆகியோர் நேரில் தெரிவித்ததை தொடர்ந்து நேராய்வு செய்யப்பட்டது. மேற்படி பகுதியில் சிறுபாலம் அமைக்க ரூ.1.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5984/இ1/2022<br>**தீர்மானம் எண்:262.**<br>**28.09.2022-ல் நகர மன்ற தீர்மானம் எண் 176, அனுமதிக்கப்பட்டது.**<br>**எனவே, இத்தீர்மானத்தினை ரத்து செய்யப்பட்டது.** |

| | |
|---|---|
| 30). | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் டீ.வி நகரில் உள்ள பொது கழிப்பிடம் பழுதடைந்துள்ளதையும், கதவு, பைப்கள் சேதமடைந்துள்ளதையும் சரி செய்து வழங்குமாறு அப்பகுதி நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் ஆகியோர் தெரிவித்ததை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டது. அதன்படி மேற்கண்ட பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்தை சீரமைக்க ரூ.1.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 1285 /இ1/2022<br>**தீர்மானம் எண்:263 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 31). | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14ல் எம்.ஜி.ஆர் நகரில் உள்ள பொது கழிப்பிடம் பழுதடைந்துள்ளதையும், கழிவறையில் செப்டிக்டேங்க் தண்ணீர் கசிவதை சரி செய்து வழங்குமாறு அப்பகுதி நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் ஆகியோர் தெரிவித்ததை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டது. அதன்படி மேற்கண்ட பகுதியில் உள்ள பொது கழிப்பிடத்தை சீரமைக்க ரூ.1.00 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 1546 /இ1/2022<br>**தீர்மானம் எண்:264 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| 32). | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.22ல் உள்ள சிங்காரத் தோப்பு தெருவில் திறந்தவெளி மழை நீர் கால்வாய் உள்ளதால் பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கு மிகவும் சிரமமாக உள்ளதாகவும் மேற்படி இடத்தில் புதியதாக சிறுபாலம் அமைத்து தருமாறு நகரமன்ற துணைத்தலைவர் மற்றும் நகரமன்ற தலைவர் ஆகியோர் நேரில் தெரிவித்ததை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டது. அதன்படி மேற்கண்ட பகுதியில் சிறுபாலம் அமைக்க ரூ.1.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5985 /இ1/2022<br>**தீர்மானம் எண்:265 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 33). | திண்டிவனம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.32ல் உள்ள மயிலம் ரோடு இந்திரா நகரில் சிறுபாலம் கடந்த மழையினால் சேதமடைந்து பொதுமக்களுக்கும் போக்குவரத்திற்கும் மிகவும் சிரமமாக உள்ளதாகவும் மேற்படி இடத்தில் உள்ள சிதிலமடைந்த சிறுபாலத்தினை இடித்துவிட்டு புதியதாக சிறுபாலம் அமைத்து தருமாறு அப்பகுதி நகரமன்ற உறுப்பினர் மற்றும் நகரமன்ற தலைவர் ஆகியோர் நேரில் தெரிவித்ததை தொடர்ந்து இடம் நேராய்வு செய்யப்பட்டது. அதன்படி மேற்கண்ட பகுதியில் சிறுபாலம் அமைக்க ரூ.1.50 இலட்சத்திற்கு (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியை மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5986/இ1/2022<br>**தீர்மானம் எண்:266 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| **34).** | திண்டிவனம் நகராட்சி அலுவலகத்தில் உள்ள நகரமன்ற தலைவர் அறை மற்றும் நகரமன்ற கூட்டரங்கில் பின்வரும் வசதிகள் செய்து தருமாறு நகரமன்ற தலைவர் அவர்களின் கடிதம் வரப்பெற்றுள்ளது.<br>1. கண்காணிப்பு கேமரா மற்றும் டிவி.<br>2. சோபா செட்.<br>3. அலுவலக டேபிள்-2.<br>4. கதவு பழுதடைந்துள்ளதை சரி செய்தல்.<br>5. வாஷ் பேஷன் அமைத்தல்.<br>6. பீரோ.<br>7. ஜன்னல் கண்ணாடி, கதவு கண்ணாடி மற்றும் கதவு பூட்டு சரி செய்தல்.<br>8. கடிகாரம்.<br>**நகரமன்ற கூட்டரங்கில் பின்வரும் வசதிகள்**<br>1. கடிகாரம்.<br>2. ஏசியை சரி செய்தல்.<br>மேற்கண்டவாறு பணிகளை மேற்கொள்ள ரூ.1.50/- இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது மேற்படி பணி மேற்கொள்ளவும், பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :-**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் : 5987/இ1/2022<br>**தீர்மானம் எண்:267 .**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | |
|---|---|
| **35).** | இந்நகராட்சியில் **குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி வருவாய் நிதி – 2022-2023ன்** கீழ் நகர மன்ற தீர்மான எண் : 67 நாள் : 26.08.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 2 | வார்டு எண் - 25ல் ஜெயபுரம் பகுதியில் தேசிய நகர்புற சுகாதார இயக்க திட்டத்தின் கீழ் ஜெயபுரம் பகுதியில் புதியதாக நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்பட உள்ளது. எனவே மேற்கண்ட பகுதியில் ஏற்கெனவே உள்ள பழைய ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்துதல் பணி | 4.00 | எம்/எஸ். டி.டீ.ஆர். & கோ திண்டிவனம் | -0.08% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எம்/எஸ். ஹரிகன்ஸ்ரக்சன்ஸ், திண்டிவனம் | 1.04% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு** :-

1.) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள எம்/எஸ். டி.டீ.ஆர். & கோ, திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 3611 /இ1/2022)

**தீர்மானம் எண்:268 .**

**அனுமதிக்கப்பட்டது.**

| 36). | இந்நகராட்சியில் **குறுகிய கால ஒப்பந்தப்புள்ளி கல்வி நிதி** – **2022-2023**ன் கீழ் நகர மன்ற தீர்மான எண் : 69 நாள் : 26.08.2022 ல் அனுமதிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பின்வரும் பணிக்கு 09.09.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
|---|---|

| **வ. எண்** | **வேலையின் பெயர்** | **மதிப்பீட்டுத் தொகை** | **ஒப்பந்ததாரர் பெயர்** | **ஒப்பந்தப்புள்ளி சதவீதம்** |
|---|---|---|---|---|
| 13 | வார்டு எண் – 30ல் கிடங்கல் இந்து ஆரம்பப் பள்ளி கட்டிடத்தின் மேல் தளத்தில் ஓடு மற்றவும், பள்ளியை ஒட்டியுள்ள கால்வாயை மூடவும், சத்துணவு கூடத்தில் டைல்ஸ் பதிக்கவும் வெளிப்புற சுவற்றில் பூசு வேலை செய்து. வர்ணம் பூசவும், இரும்பு ஏணிப்படி அமைக்கவும் பள்ளி அருகில் சிறுபாலம் அமைக்கவும், மின் விசிறி, மின் விளக்கு, மேஜை, நாற்காலி மற்றும் கணினிகள் போன்ற வசதிகள் செய்தல் பணி | 9.50 | திரு. எம்.தமிழ்வாணன், திண்டிவனம் | -0.08% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு |
| | | | எம்/எஸ்.பி.கே.பி கண்ஸ்ரக்சன்ஸ், திண்டிவனம் | 0.60% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு** :-

1.) மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள திரு. எம்.தமிழ்வாணன், திண்டிவனம் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

2.) மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்றஅனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் : 1387/இ1/2022)

**தீர்மானம் எண்:269 .**

**அனுமதிக்கப்பட்டது.**

| 37). | இந்நகராட்சியில் வருவாய் நிதி 2022 - 2023ன் கீழ் பின்வரும் பணிக்கு 19.10.2022 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கு முடிவிற்கும் வைக்கப்படுகிறது. |
|---|---|

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் (%) | | குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் (திருவாளர்கள்) |
|---|---|---|---|---|---|---|
| | | | | அதிகம் | குறைவு | |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 6 | வார்டு எண்.23ல் உள்ள தனபால் நகரிலிருந்து தட்சணாமூர்த்தி பகுதிக்கு செல்லும் பாதையில் 7 மீ.நீளத்திற்கு 1மீ மேல் தாழ்வாக உள்ளதால் மழை நேரங்களில் தண்ணீர் தேங்கி அப்பகுதிக்கு செல்வதற்கு மிகவும் சிரம்மாக உள்ளது. இதனை தீர்வு செய்யும் வகையில் அப்பள்ளத்திற்கு 1 மீட்டர் விட்டம் உள்ள சிமெண்ட் குழாய் அமைத்து மேற்பரப்பில் வெட் மிக்ஸ் (Wet Mix Macadam) அமைத்து சீரமைத்தல் பணி (நகர மன்ற தீர்மான எண் : 169 நாள் : 28.09.2021) | 0.60 | எஸ்.வி.எஸ். கே & கோ | - | 0.01 | எஸ்.வி.எஸ். கே & கோ |
| | | | ஸ்ரீஹரி கன்ஸ்ரக்சன்ஸ் | 1.84 | - | |

**அலுவலக குறிப்பு** :-

மேற்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கலம் 7ல் கண்டுள்ளவாறு குறைவான ஒப்புந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரிகளின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று வேலை உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்:270 .**

**அனுமதிக்கப்பட்டது.**

| | |
|---|---|
| **38).** | திண்டிவனம் நகராட்சி எல்லைக்குப்பட்ட வார்டு–B, பிளாக் எண்-27, நகர அளவு **எண்.84, பழைய சர்வே எண்**-92/1, திண்டிவனம் கிராமம், பாட்டை, சர்கார் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ள இடத்தில் கட்டப்பட்டு உள்ள அருள்மிகு **ஸ்ரீ மூங்கிலம்மன் கோயில்** பெயரில் வருவாய்த்துறை மூலம் பட்டா பெறுவதற்கு திண்டிவனம் நகராட்சி மூலம் தடையில்லா சான்று வழங்க மன்ற தீர்மானம் நிறைவேற்றி தருமாறு 23.12.2022 நாள் இட்ட மனு மூலம் 8-வார்டு நகர மன்ற உறுப்பினர் அவர்கள் நகர மன்ற தலைவருக்கு மனு அளித்துள்ளார். மேந்படி மனுவில் குறிப்பிட்டுள்ள கோரிக்கையினை நகர மன்ற கூட்டத்தில் மன்ற பொருள் வைக்கலாம் என நகர மன்ற தலைவர் அவர்கள் குறிப்பு வழங்கியுள்ளார். மேற்படி நகர மன்ற தலைவர் அவர்களின் குறிப்பின்படி மோற்காணும் மன்ற பொருள் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:-**<br>8- வார்டு நகர மன்ற உறுப்பினரின் கோரிக்கையின் மீது மன்ற ஒப்புதலுக்கு.<br>ந.க.எண் ; /எப்1/2022<br>**தீர்மானம் எண்**:271.<br>**நகர மன்ற உறுப்பினர் கோரிக்கையினை மன்றம் அனுமதிக்கப்பட்டது.** |

**ஒம்)/– திருமதி.ஆர்.நிர்மலா.,**
**தலைவர்,**
**திண்டிவனம் நகர மன்றம்.**

// உண்மை நகல் //

ஆணையாளர்,
திண்டிவனம் நகராட்சி.